வேலூர் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஒ.மு.எண். 2695/அ3/2024 நாள். 23.08.2024

பொருள்: கற்றல் கற்பித்தல் பயிற்சி – வேலூர் மாவட்டம் – 2024–2025ஆம் கல்வி ஆண்டில் பி.எட்., பயிலும் மாணவ / மாணவிகளுக்கு கற்பித்தல் பயிற்சி மேற்கொள்ள அனுமதி அளித்தமை – இரண்டாம் பருவத் தேர்வுகள் எழுத ஏதுவாக பயிற்சியிலிருந்து விடுவித்தல் – தொடர்பாக.

பார்வை:
1. இவ்வலுவலக இதே எண்ணிட்ட செயல்முறைகள், நாள்.02.08.2024.
2. சார்ந்த கல்லூரி முதல்வரின் கடித நாள். 19.08.2024.

---

2024–2025ஆம் கல்வியாண்டில் பி.எட்., பயிலும் மாணவ / மாணவிகள் அதன் ஒரு பகுதியான கற்றல் கற்பித்தல் பயிற்சியினை மேற்கொள்ள பட்டியலில் உள்ள மாணாக்கர்களுக்கு அனுமதி ஆணை பார்வை (1)இல் காணும் செயல்முறைகளின்படி வழங்கப்பட்டது. தற்போது இரண்டாம் பருவத் தேர்வுகள் 2024 செப்டம்பர் மாதம் 02 முதல் 06 ஆகிய ஐந்து நாட்கள் நடைபெறவுள்ளதால் பயிற்சியிலிருந்து விடுவிக்க கோரி விண்ணப்பம் பார்வை (2)இல் காணும் சார்ந்த கல்லூரி முதல்வரின் கடிதம் பெறப்பட்டது.

சார்ந்த மாணாக்கர்களை தேர்வெழுத ஏதுவாக மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் பயிற்சியிலிருந்து விடுவித்து கல்லூரிக்கு அனுப்புமாறு சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது. மேலும் பார்வை (1)இல் காணும் இவ்வலுவலக கடிதத்தில் குறிப்பிட்ட 80 நாட்களுக்கு கடைசி ஐந்து வேலை நாட்களில் ஈடு செய்து கொள்ள சார்ந்த பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகின்றது.

இணைப்பு – மாணாக்கர்களின் பெயர்ப்பட்டியல்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

23/08

பெறுநர் – முதல்வர், அரசு கல்வியியல் கல்லூரி, வேலூர்.
நகல் – சார்ந்த அரசு / அரசு உதவி பெறும் / நகரவை உயர் / மேல்நிலைப்பள்ளி, தலைமையாசிரியர்கள்